1969 செப்டம்பர் 11]

இது போன்ற ஆக்கப் பணிகள் செய்து தர வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கங்கே இருக்கிற மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பணிகளுடைய அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து, அவைகளுக்கான வரிசைக்கிரமங்களையும் நிர்ணயம் செய்து கொடுக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சொல்கிற திட்டத்திற்கு ரூ. 8.10 லட்சம் செலவு ஆகும் என்று அறியப்படுகிறது. கைப்பிடி சுவர்கள் எழுப்ப வேண்டும், இணைப்புச் சுவர்கள் எழுப்ப வேண்டும், குறுக்குப் பாதை போட வேண்டும். ஆக, இந்த அளவு பெரிய தொகை செலவழிக்க, கொஞ்ச காலம் பொறுத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

Unauthorised night bus service

219 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

Whether unauthorised night bus services are being runn by some private operators between Madras and Tiruchirappalli daily by misusing the contract carriage permits issued to them?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சென்னைக்கும்-திருச்சிக்கும் இடையில் இரவு நேரங்களில் ஓடிய சில பேருந்துகள் அனுமதியின்றி ஓடியதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, விதிகளை மீறிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: அப்படியானால் அவர்கள் எத்தனை பேர்கள்? என்ன நடவடிக்கை அவர்கள் மீது எடுத்திருக்கிறீர்கள்? அதில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் அவர்களோடு ஒத்துழைத்து, 'நாங்களெல்லாம் காண்டிராக்ட் காரியேஜில் போகிறோம், பணம் கொடுக்கவில்லை' என்று சொல்லி, அவர்களுக்கு டிக்கெட் கொடுப்பதும் மறுக்கப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சென்னைக்கும்-திருச்சிக்கும் இடையே உள்ள வழித்தடங்களில் அனுமதியின்றி ஓடியதற்காக 15 பேருந்துகளின் மீது குற்றம் சாட்டப்பட்டு, மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு, 15 வழக்குகளில் 6 வழக்குகள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன. எட்டு வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வழக்கில் சாதகமாக தீர்ப்பு ஆகவில்லை, அதாவது, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இவை திருச்சிக்கும், சென்னைக்கும் இடையே ஓடிய பேருந்துகள். அது தவிர, மேலும் 71 பேருந்துகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இரவிலே ஓடுகிற பஸ்களைப் போலவே பல்வேறு ரூட்களில் ஓடுகின்ற டூரிஸ்டு பஸ்களின் ஏஜெண்டுகள் ரயில்வே ஸ்டேஷன், சர்க்கார் போக்குவரத்து பஸ் ஸ்டாண்டு ஆகிய இடங்களில் நின்றுகொண்டு 'வாருங்கள், உடனடியாக அழைத்துச் செல்கிறோம்' என்று

கான்வாஸ் செய்கிறார்கள். அதோடு கூட அந்த பஸ்களில் பணம் கொடுக்கிற அளவுக்கு அவர்கள் டிக்கெட் போட்டுக் கொடுப்பதே இல்லை. அதனாலே அந்த டிக்கெட்டுகள் பற்றிய கணக்கு வருவதில்லை. ஆகவே, இப்படி அரசினருக்கு வருகின்ற வருமானத்தை பல முறைகளின் மூலம் தடுக்கின்ற இந்த நிலையில் இப்படிப்பட்ட பஸ்கள் ஓடுவதை தடுத்து நிறுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த நிலைமைகளை சர்க்கார் ஆழ்ந்து கவனித்து வருகிறது. நானே கூட இப்படிப்பட்ட பேரூந்துகளில் ஒன்றை இடையிலே மறித்து, அதிகாரிகளை விட்டு சோதனை செய்யச்சொன்ன நேரத்தில், அதில் வந்தவர்கள் அத்தனை பேர்களும், அந்த டிரைவர், கண்டக்டர், எடுத்துச் சொன்னபடி அந்தக் குழுவின் தலைவர் சொல்லைச் சொல்லியும், மறுத்து உண்மையைக் கூறிவிட்டார்கள். ஆம்னிபஸ் சொந்தக்காரர்களின் இந்தப் போக்கைக் கவனித்தால், அந்த பஸ்களை தடை செய்யலாமா என்ற யோசனை சர்க்காருக்கு இருந்து வருகிறது.

Secretariat Staff Co-operative Bank

* 220 Q.—Thiru K. CHEEMAICHAMY :
Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any representations were received by the Chief Secretary from the Members of the Madras Secretariat Staff Co-operative Bank during December 1967 alleging irregularities in the running of bank, and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) : தலைவர் அவர்களே, கேள்வியில் குறிப்பிட்டிருக்கிற முறையீடு, தலைமைச் செயலருக்கு, 1967 டிசம்பரில் கிடைக்கவில்லை. ஆனால், 1968 ஜனவரியில் கிடைத்தது. குற்றச்சாட்டு, செயற்குழுக் கூட்டம் நடைபெறவில்லை என்பது. அதன்மீது கூட்டுறவுத் துறை அதிகாரி விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அமைச்சரவர்கள், மீட்டிங் நடக்கவில்லை என்றார்கள். ஆனால், நடந்து, மோசடி நடந்திருக்கிறது. அதில் சம்பந்தப்பட்ட உதவிச் செயலர்கள் எத்தனைபேர் ? அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் எல்லோரும் கூட்டம் போட்டு, செயற் குழுவை அப்புறப்படுத்தி, தனி அதிகாரியைப் போட்டு, நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று கேட்டதற்கு இணங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கையாடல்பற்றி, காவல் துறை அதிகாரிகள் இன்னும் விசாரித்து வருகிறார்கள்.